DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.210/2024

Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.சாந்தி |
| Father's / Husband Name | : | நாகராஜ் |
| Village | : | கம்பம் |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of May 2026.

புகார்தாரர் ஆஜர்.

முதல் விசாரணை:

புகார்தாரரை எனக்கு தெரியும். கடந்த இரண்டரை வருடத்திற்கு முன்பு புகார்தாரரிடம் நான் ரூபாய் 5 லட்சம் வட்டிக்கு கடன் வாங்கினேன். அதனை திருப்பி செலுத்தி விட்டேன். மேற்படி பணத்திற்கு மாதம் மாதம் வட்டியும் செலுத்திய உள்ளேன்.நான் முதல் முதலில் புகார்தாரரிடம் ஒரு லட்சம் வாங்கிய போது தாவா காசோலையை அவரிடம் கொடுத்தேன். கொரோனா சமயத்தில் என்னால் வட்டி செலுத்த முடியவில்லை. நான் முழு பணத்தையும் திருப்பிக் கொடுத்த பின்பு காசோலை கேட்டபோது அவர் வட்டி தர வேண்டும் என்று கேட்டார். நான் வட்டி தொகையை கொடுக்க மாட்டேன் என்று கூறியதற்கு தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

குறுக்கு விசாரணை

1. நான் வட்டி மற்றும் அசல் கொடுத்ததற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் உங்களிடம் தான் கொடுத்தேன் என்று

புகார்தாரரின் வழக்கறிஞரை காண்பித்து சாட்சியம் அளித்தார். நான் குள்ளப்பகவுண்டன்பட்டியை சேர்ந்த குணசேகர் என்பவரிடம் நான் பணம் பெற்று வேறொரு காசோலை வழக்கில் தண்டனை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் உத்தமபாளையம் சார்பு நீதிமன்றத்தில் என் மீது சக்கரையம்மாள் என்பவர் தொகை வசூல் செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் EP 36/2013 என்ற நிறைவேறு மனு தாக்கல் செய்து எனது சொத்துக்கள் ஏலத்திற்கு சென்றது என்றால் இல்லை.

2. மேற்படி சொத்தை பிரகலாதன் மனைவி மேகலா என்பவர் ஏலத்தில் எடுத்தார் என்றால் இல்லை. நான் ஊரில் இதே போல் பல நபர்களிடம் பணம் பெற்று திருப்பி கொடுத்து விட்டதாக பொய்யான எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுக்காமல் காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளேன் என்றும், அதனால் நான் தண்டிக்கப்பட வேண்டிய நபர் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு நான் கொடுக்க வேண்டிய பணத்தை திருப்பி கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.13 18:15:21 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam